மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
E.A.12/2013 in E.P.No.9/2012.

பெயர் : சின்னசாமி
சாட்சி – ம.சா–2 நாள்: 11.09.2025

---

குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர்கள் தரப்பு)

1. சுப்ரமணியம் எனது அண்ணன் ஆவார். 2ம் எதிர்மனுதாரர் விஜயா என்கிற விஜயலட்சுமி சுப்ரமணியத்தின் மனைவி என்றால் சரியல்ல. மேற்படி விஜயா என்கிற விஜயலட்சுமியை எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அவர் தற்போது எங்கு இருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. சுப்ரமணியத்திற்கு அவர் விவாகரத்து கொடுத்துவிட்டு சென்றுவிட்டார். வசந்தியை சுப்பிரமணியம் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான்.

2. விஜயலட்சுமி சுப்ரமணியத்திற்கு விவாகரத்து எதுவும் கொடுக்கவில்லை என்றும், அவருக்கு ஜீவனாம்ச உரிமை மட்டும் வேண்டாம் என்று எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. விஜயலட்சுமி தற்போதும் உயிருடன் உள்ளதால் வசந்தி சுப்ரமணியத்தின் சட்டபூர்வ மனைவி என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. மனு சொத்தினை எடுக்கக் கூடாது என்று தடை மனு போட்டு உள்ளோம் என்றால் சரிதான்.

3. மனு சொத்து சுப்ரமணியத்திற்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் வசந்திக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றும் சொல்கிறேன் என்றால் சரிதான். மனு சொத்து சுப்பிரமணியத்திற்கு எவ்வாறு வந்தது என்று ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வசந்தி சுப்ரமணியத்திற்கு சட்டபூர்வ மனைவியே கிடையாது என்ற போது, வசந்தி பெயருக்கு சுப்பிரமணியம் எழுதி வைத்ததாக சொல்லும் உயிலில், வசந்தியை மனைவி என்று குறிப்பிட்டுள்ளதால் மேற்படி உயில் ஆவணமே செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தின்படி நான் பெற்றுள்ள கிரைய ஆவணமும், நான் எனது மகளுக்கு எழுதி வைத்துள்ள கிரைய ஆவணமும், செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

4. நான் எனது மகள் பெயருக்கு எழுதி வைத்துள்ள கிரைய ஆவணத்தில் ராசம்மாள் என்பவரிடமிருந்து நான் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பெற்ற சொத்தினையும், எழுதிக்கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராசம்மாள் எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ஒரே மாதத்தில் 01.11.2011 தேதியில் ஆவண எண். 426/2011 மூலமாக ரத்து செய்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராசம்மாள் பத்திரத்தை ரத்து செய்த பின்னர் தான் நான் எனது மகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. 07.09.2012 தேதியில் தான் நான் எனது மகள் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். சுப்பிரமணியம் எழுதி வைத்ததாக சொல்லும் உயில் படியும், உயிலின் படி நான் பெற்ற கிரைய ஆவணத்தின் படியும், ராசம்மாள் எனது பெயருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் படியும், நான் எனது மகள் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதால், மேற்படி ஆவணங்கள் செல்லாது என்பதாலும் ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதாலும், நான் செய்து கொடுத்த கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6. வசந்தி பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட உயில் ஆவணம் அசல் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. உயிலின் அசல் தற்போது யாரிடம் உள்ளது என்றால் உயிலில் கண்டுள்ள வேறு சொத்தினை வாங்கியவரிடம் உள்ளது. அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. உயிலில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள நபர்களை விசாரித்து அசல் உயிலை தாக்கல் செய்தால் தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரியல்ல. அசல் உயிலை தாக்கல் செய்யாமல் எதிர் மனுதாரர் நிறைவேற்று மனு சொத்தை சுவாதீனம் எடுப்பதை தடுப்பதற்கு எங்களுக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

7. சுப்பிரமணியம் காச நோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். செல்வராஜ் பெயருக்கு அசல் வழக்கு 1100/2008 வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் எங்களுக்கு எப்போது தெரியும் என்றால் 2012ம் ஆண்டில் தெரியும். எங்களுக்கு உரிமை உள்ளதாக சொல்லும் சொத்தானது வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதற்கு எதிராக நாங்கள் மேல்முறையீடு ஏதேனும் செய்தோமா என்றால் இல்லை. சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் தான் நாங்கள் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. சொத்திற்கான வரிவகையறாக்களை எதிர்மனுதாரர் செல்வராஜ் தான் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நானோ எனது மகளோ மனு சொத்தில் குடியிருக்க வில்லை என்றால் சரியல்ல. இந்த மனு தாக்கல் செய்யும் போது எனது மகள் வில்லங்க சான்று போட்டுப்பார்த்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது மகளுக்கு 2012ம் ஆண்டு கிரைய சாசனம் எழுதி கொடுத்த போது வில்லங்க சான்று போட்டுப்பார்த்தேனா என்றால் இல்லை. கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்க எனக்கு உரிமை உள்ளதா என்று தெரிந்து கொள்ளமலேயே நான் கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. இந்த மனுவை எனது மகள் தாக்கல் செய்த பின்னராவது ராசம்மாள் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராசம்மாள் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்த விவரம் எனக்கு தெரியும் என்றும், அதை தெரிந்தும் நான் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் எனக்கோ எனது மகளுக்கோ மனு சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. மனு சொத்திற்கு வரி செலுத்துவதோ, மின் மற்றும் குடிநீர் கட்டணங்கள் செலுத்துவதோ, மனு சொத்தில் உரிமை உள்ளதாக எடுத்து கொள்ள முடியாது என்றால் சரியல்ல.

10. மனுதாரர் சுவாதீனம் எடுப்பதை தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எனது மகள் தாக்கல் செய்துள்ள இந்த தடை மனு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.09.11 18:07:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.